# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.254/2020.
Prosecution witness for P.W.24.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ரெகுராஜன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.02.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம், மேலசெவல் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு செய்துங்கநல்லூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது ஏரல் காவல்நிலைய ஆய்வாளரான திரு.பட்டாணி என்பவர் ஒரு நாள் விடுப்பில் சென்றிருந்ததால் அன்றே நான் பொறுப்பு ஆய்வாளராக இருந்ததால் 13.11.2019 அன்று அ.சா.21 பதிவு செய்து வைத்திருந்த அ.சா.ஆ.17 வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 14.11.2019 அன்று அதிகாலை 3.30 மணியளவில் சம்பவ இடமான மாரமங்கலம் விவசாய சங்கம் அருகில் உள்ள அ.சா.3 வீட்டின் முன்பாக சம்பவ இடத்தை தெருவிளக்கு மற்றும் டார்ச் லைட் உதவியுடன் சாட்சிகள் அ.சா.12 மற்றும் செந்தில்வேல் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தேன். அவை முறையே **அ.சா.ஆ.19 மற்றும் 20**. சம்பவ இடத்தில் 4.30 மணியளவில் ரத்தம்பட்ட மற்றும் ரத்தம்படாத தார் ரோட்டின் துண்டுகளையும், சம்பவ இடத்திலிருந்து பைபர் கிளாஸ் மற்றும் கண்ணாடி துண்டுகள் ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல்

மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 21**. மேற்படி தார் ரோட்டின் ரத்தம்பட்ட மற்றும் ரத்தம்படாத துண்கள் **சா.பொ.6 மற்றும் 7**. மேற்படி பைபர் மற்றும் கண்ணாடி துண்டுகள் **சா.பொ.8**. பின்பு சாட்சிகள் அ.சா.12, செந்தில்வேல் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அ.சா.4, மாரித்தங்கம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அ.சா.1 னிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். அ.சா.2 மயக்க நிலையில் இருந்ததால் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்ய முடியவில்லை. பின்னர் மேல்சிகிச்சைக்காக அங்கிருந்து அனுப்பப்பட்ட காயம்பட்ட காளிமுத்து மற்றும் காயம்பட்ட அ.சா.3 ஆகியோர்களை திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் விசாரித்தபோது காளிமுத்து மயக்க நிலையில் இருந்ததால் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யமுடியவில்லை. அ.சா.3 னிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். அ.சா.3 னிடம் இருந்து அவரது ரத்தம்பட்ட நைட்டியை அவர் என்னிடம் ஒப்படைத்ததை நான் கைப்பற்றினேன். அந்த ரத்தம்பட்ட நைட்டி **சா.பொ.9**. பின்னர் 14.11.2019 அன்று 14 மணியளவில் சம்படி விலக்கு அருகில் 1, 2 எதிரிகளை கைது செய்து விசாரித்தபோது 1ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலத்தை அ.சா.13 மற்றும் அவரது உதவியாளரான முத்துப்பாண்டி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 4. அதன் அடிப்படையில் 1ம் எதிரி மாரமங்கலத்தில் 1ம் எதிரி வீட்டிற்கு அருகில் உள்ள செந்துாரான் என்பவர் வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த கத்தியை 16.15 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே குறியீடு

செய்யப்பட்ட அ.சா.ஆ 6. அந்த கத்தி ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சா.பொ.1. பின்னர் 2ம் எதிரி கைது செய்த இடத்தில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 5. அதன் அடிப்படையில் 2ம் எதிரி மாரமங்கலம் கிராமத்திற்கு மேற்புறம் உள்ள 2ம் எதிரிக்கு சொந்தமான தோட்டத்தின் தென்புறம் இருந்து எடுத்து அடையாளம் காட்டி ஆஜர் செய்த நான்கு கம்புகளை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 7. அந்த கம்புகள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சாபொ2 முதல் 5. பின்னர் 1, 2 எதிரிகளையும், வழக்கு சொத்துக்களையும் நிலையம் கொண்டு வரும்போது கிடைத்த ரகசிய தகவலின்படி 17.45 மணியளவில் பழையகாயல் பேருந்து நிறுத்தம் அருகில் சென்றபோது அங்கு நின்றுகொண்டிருந்த 3 முதல் 5 எதிரிகளை கைது செய்து 18.45 மணிக்கு நிலையம் கொண்டுவந்து திரேக பரிசோதனை செய்து வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த படிவங்கள் 91 **அ.சா.ஆ 22** வரிசை (எண்ணிக்கையில் 4). பின்னர் வழக்கு கோப்பை ஏரல் காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு செய்துங்கநல்லூர் காவல்நிலையம் சென்றேன்.

1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.ஆ 20 வரைபடத்தில் சங்கர் காரைவீடு, நாராயணன் காரைவீடு, மூக்கன் காரைவீடு, தங்கவள்ளி வீடு, கமலாவீடு, பாப்பா வீடு, கணபதி வீடு, எதிர் வரிசையில் திரவியம் ஆஸ்பெட்டாஸ் வீடு, விவசாய சங்க

காலிமனை, திருமணி, ஆஸ்பெட்டாஸ் வீடு, நாராயணன் வீடு ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு போயிருந்த வீடு எல்லா வீடுகளிலும் ஆட்கள் குடியிருந்தார்கள். அந்த வீடுகளில் குடியிருந்தவர்களை நான் சாட்சிகளாக விசாரிக்கவில்லை. நான் மருத்துவமனைக்கு அவசரமாக செல்லவேண்டியிருந்ததால் விசாரிக்கவில்லை. எதிரிகளை அவசரமாக கைது செய்யவேண்டியிருந்ததால் அவர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவர்களை ஏன் விசாரிக்கவில்லை என்றால் மருத்துவர்கள் சான்று அளித்த பிறகுதான் விசாரித்தேன். மருத்துவ ஆவணங்களில் எதிரிகளின் எண்ணிக்கை, யார் யாரை தாக்கினார்கள் என்ற விபரங்கள் முரண்பட்டிருந்ததால் நான் மருத்துவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் ரத்தம் உறைந்திருக்கும் இடத்திற்கு அருகில் கண்ணாடி துண்டுகள், பைபர் கிளாஸ் இவைகள் உடைந்து கிடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த இடம் மாலை மயங்கும் நேரத்தில் குடிகாரர்கள் குடித்துவிட்டு கும்மாளம் போடும் இடம் என்றால் சரியல்ல. அப்போது ஏற்பட்ட தகராறில் கூட சாட்சிகளுக்கு காயம் ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. முன்விரோதம் காரணமாக காயம்பட்ட நபர்கள் இந்த எதிரிகளை சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது மாரமங்கலம் கிராமம். 1, 2 எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் இடம் மாரமங்கலம் என்றால் சம்படி விலக்கு அந்த பகுதி மாரமங்கலத்திலிருந்து வடபுறமாக 2 கி.மீ தள்ளி உள்ளது. அந்த பகுதி மாரமங்கலம் கிராமமா என்பது எனக்குத் தெரியாது. மற்ற மூன்று எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் இடம் ஏரல் காவல்நிலைய எல்லைக்குட்பட்டது என்றால் சரிதான். அதனால் எதிரிகள் சம்பவத்தை நிகழ்த்திவிட்டு அதே

காவல்நிலைய எல்லைக்குள்ளே சுத்திக் கொண்டதால் நாங்கள் சுலபமாக பிடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. சம்பவத்தை நிகழ்த்திவிட்டு எங்கள் சரகத்தில் பதுங்கிக் கொண்டிருந்தவர்களை ரகசிய தகவல் மூலம் கண்டுபிடித்து கைது செய்தேன். விலக்கு என்றால் பிரதான சாலையிலிருந்து கிளைச்சாலை பிரியும் இடம் என்றால் சரிதான். அந்த இடத்தில்தான் 1, 2 எதிரிகளை கைது செய்தேன். நான் முதன் முதலில் 1, 2 எதிரிகளை பார்க்கும்போது அவர்கள் சுமார் 150 அடி துாரத்தில் இருந்தார்கள். நான் போலீஸ் வாகனத்தில் சென்றேன். சீருடையில்தான் சென்றேன். எதிரிகள் ஓடவும் இல்லை என்றும், எங்களுக்கு விரட்ட வேண்டிய அவசியமும் இல்லை என்றால் சரிதான். ஏற்கனவே எளிதில் கிடைக்கக்கூடிய ஒரு கத்தியையும், நான்கு கம்புகளையும் நிலையத்திலேயே ஏற்பாடு செய்து வைத்துக் கொண்டு எதிரிகளை சுதந்திரமாக திரிந்தவர்களை அவர்களுடைய வீட்டிலிருந்து அழைத்து வந்து நாங்கள் தயார் செய்துவைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டு இந்த வழக்கை உருவாக்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், எந்த எதிரியும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், நானும் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் புலன் விசாரணை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல.

4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.1 என் விசாரணையில் தன்னுடைய முகவரியாக சாமிநாதபுரம், தீப்பாச்சி மாரமங்கலம் என்ற விலாசத்தைக் கொடுத்துள்ளார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மாரமங்கலம் என்றால் சரிதான். தீப்பாச்சி மாரங்கலத்திற்கும், மாரமங்கலத்திற்கும் சுமார் அரை கி.மீ துாரம் இருக்கும்.

தீப்பாச்சி மாரமங்கலம் என்பது சம்பவ இடத்திலிருந்து வடக்கு திசை நோக்கி உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தெரு பெயர் முத்தாராம்மன் கோவில் தெரு. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மாரமங்கலம் முத்தாரம்மன் கோவில் தெருவில் இருப்பதாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால் சம்பவம் முத்தாரம்மன் கோவில் தெருவில் நடந்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. அ.சா.3 என் விசாரணையில் தன் விலாசமாக கதவு எண் 2/25, முத்தாரம்மன் கோவில் தெரு, மாரமங்கலம் என்று சொல்லியுள்ளார். அவர் தீப்பாச்சி மாரமங்கலத்தில் குடியிருப்பதாக சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.சா.3 னின் வாக்குமூலத்தில் சாமிநாதபுரம், தீப்பாச்சி மாரமங்கலம் என்று அ.சா.3 னின் விலாசமாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன். விவசாய சங்க கட்டிடம் அமைந்துள்ள தெருவில் அ.சா.3 க்கு வீடே இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியிடம் நான்தான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 4 வது வரியில் எங்களுக்கு சொந்தமான மாரமங்கலம் ஊருக்கு தென்புறமுள்ள வாழைத் தோட்டத்தில் தெற்கு மூலையில் அனைத்து கம்புகளையும் மறைத்து வைத்துவிட்டு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ 7 கைப்பற்றுதல் மகஜரில் மாரமங்கலம் கிராமத்திற்கு மேற்குபுறமுள்ள சாமித்துரை என்பவருக்கு பாத்தியப்பட்ட தோட்டத்திலிருந்து கம்புகள் கைப்பற்றப்பட்டதாக சொல்லியுள்ளேன். அதனால் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள இடத்திலிருந்து நான் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2ம் எதிரிக்கு காயம்பட்டதாகவும், அவர் ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு

சென்றுவிட்டு வந்ததாகவும் சொல்லியுள்ளார். ஸ்ரீவைகுண்டத்திலிருந்து திருநெல்வேலிக்கோ, தூத்துக்குடிக்கோ வரவேண்டுமென்றால் மாரமங்கலம் வழியாக போக வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. சாதாரணமாக பேருந்துகள் வாகைக்குளம் வழியாகத்தான் வரும் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. சம்பமடி விலக்கிலிருந்து தென்மேற்கு திசையில் ஏரல் காவல்நிலையம் உள்ளது. சம்படி விலக்கிலிருந்து பழையகாயல் கிழபுறமாக உள்ளது. சம்படி விலக்கிலிருந்து ஏரல் காவல்நிலையத்திற்கு பழைய காயல் வழியாக வரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். அதனால் 1, 2 எதிரிகளை கைது செய்துவிட்டு பழையகாயல் வழியாக வரும்போது மற்ற எதிரிகளை கைது செய்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 14.11.2019 அன்று பதிவு செய்யப்பட்டது. அ.சா.21 உதவி ஆய்வாளர் 13.11.2019 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக கையொப்பமிட்டுள்ளார். அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யும்போது அந்த முரண்பாடு குறித்து விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அந்த முரண்பாடு குறித்து வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. 1, 2 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களை நான் கைப்பட எழுதவில்லை. நான் சொல்லச் சொல்ல என்னுடன் வந்த எழுத்தர் எழுதினார். நான் மேற்படி எழுத்தரிடம் கையொப்பம் பெறவில்லை. நான் சொல்லச் சொல்ல எழுத்தர் எழுதியதாகவும் அதில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், எந்த எதிரியும் ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், நான் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.23 18:17:03 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.